# COMBINED TECHNICAL SERVICES EXAMINATION

## (INTERVIEW POST)

## COMPUTER BASED TEST

## DATE OF EXAM: 20.07.2025 FN

## PAPER – I

## TAMIL ELIGIBILITY TEST (SSLC STANDARD), GENERAL STUDIES (DEGREE STANDARD), APTITUDE AND MENTAL ABILITY (SSLC STANDARD)

## (CODE: 503)

# பகுதி-அ (தமிழ் தகுதி தேர்வு)

## Part-A (Tamil Eligibility Test)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

---

1. இரு வினைகளின் பொருள் வேறுபாடு.

   உன்னுதல் – உண்ணுதல்

   (A) முடித்தல் – சாப்பிடுதல்
   (B) நினைத்தல் – சாப்பிடுதல்
   (C) எடுத்தல் – சாப்பிடுதல்
   (D) வழங்கல் – சாப்பிடுதல்
   (E) விடை தெரியவில்லை

2. இருவினைகளின் பொருள் வேறுபாடறிந்து சரியான தொடரைத் தேர்ந்தெடுக்க.

   பொருந்து – பொருத்து

   (A) தவறாகப் பொருந்திய சொல்லை எடுத்து சரியான சொல்லைப் பொருந்தினேன்
   (B) தவறாகப் பொருத்திய சொல்லை எடுத்து சரியான சொல்லைப் பொருந்தினேன்
   (C) தவறாகப் பொருந்திய சொல்லை எடுத்து சரியான சொல்லைப் பொருத்தினேன்
   (D) தவறாகப் பொருத்திய சொல்லை எடுத்து சரியான சொல்லைப் பொருத்தினேன்
   (E) விடை தெரியவில்லை

3. பிழையற்ற தொடரைக் கண்டறிக.

(A) எனக்குக் கொடையாக ஒரு பொருளை தர வேண்டும்

(B) எனக்குக் கொடையாக ஒரு பொருளைத் தர வேண்டும்

(C) எனக்கு கொடையாக ஒரு பொருளைத் தர வேண்டும்

(D) எனக்கு கொடையாக ஒரு பொருளை தர வேண்டும்

(E) விடை தெரியவில்லை

4. ஒற்றுப்பிழையற்ற விடையைக் கண்டறிக.

'மனத்து கண் மாசிலன் ஆதல்' என்று திருக்குறள் அறத்தை கூறுகிறது.

(A) மனத்துகண் மாசிலன் ஆதல் என்று திருக்குறள் அறத்தைக் கூறுகிறது.

(B) மனத்துக்கண் மாசிலன் ஆதல் என்று திருக்குறள் அறத்தை கூறுகிறது.

(C) மனத்து கண் மாசிலன் ஆதல் என்று திருக்குறள் அறத்தைக் கூறுகிறது.

(D) மனத்துக்கண் மாசிலன் ஆதல் என்று திருக்குறள் அறத்தைக் கூறுகிறது.

(E) விடை தெரியவில்லை

5. எழுத்துப்பிழை நீங்கிய தொடரைத் தெரிவு செய்க.

(A) ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது

(B) ஓர் அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது

(C) ஒரு அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது

(D) ஓர் அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது

(E) விடை தெரியவில்லை

6. எழுத்துப்பிழை நீங்கிய தொடரைத் தெரிவு செய்க.

(A) மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தன்னீர் கொண்டு குளிர வைத்தது

(B) மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர்க்கொண்டு குளிர வைத்தான்

(C) மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடணடியாகத் தண்ணீர் கொண்டு குளிர வைத்தாள்

(D) மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளர வைத்தானா?

(E) விடை தெரியவில்லை

7. நீக்குதல் என்னும் சொல்லின் எதிர்ச்சொல்

(A) போக்குதல்

(B) தள்ளுதல்

(C) அழித்தல்

(D) சேர்த்தல்

(E) விடை தெரியவில்லை

8. சரியான இணையைத் தேர்வு செய்க.

(A) நிறை – பொறுமை

(B) மையல் – விருப்பம்

(C) மதம் – சோர்வு

(D) பொறை – மேன்மை

(E) விடை தெரியவில்லை

9. சரியான குறிப்புப் பெயரெச்சத்தைத் தெரிவு செய்க.

(A) எழுதிய கடிதம்

(B) பார்த்த கடிதம்

(C) சிறிய கடிதம்

(D) படித்த கடிதம்

(E) விடை தெரியவில்லை

10. சரியான விடையைத் தேர்க.

'ஆற்று' என்ற வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தெரிவு செய்க.

(A) ஆற்றுதல்

(B) ஆற்றாமை

(C) ஆற்றுவான்

(D) ஆற்றுகின்றான்

(E) விடை தெரியவில்லை

11. சரியான விடையைத் தேர்க.

'வளர்' என்ற வேர்ச்சொல்லின் வினையெச்சத்தைக் கண்டறிக.

(A) வளர்த்து

(B) வளர்ந்த

(C) வளரும்

(D) வளரா

(E) விடை தெரியவில்லை

12. சரியான விடையைத் தேர்க.

'பணி' என்ற வேர்ச்சொல்லின் வினையெச்சத்தைக் கண்டறிக.

(A) பணிந்திலன்

(B) பணியா

(C) பணிந்த

(D) பணிந்து

(E) விடை தெரியவில்லை

13. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்க.

படித்தான்

(A) படித்

(B) படித்தா

(C) படி

(D) பா

(E) விடை தெரியவில்லை

14. வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக.

நடக்கிறது

(A) நட
(B) நடந்து
(C) நடக்கும்
(D) நடந்து செல்
(E) விடை தெரியவில்லை

15. ஒருமை பன்மை அறிந்து தவறான தொடரைத் தேர்க.

(A) அது புத்தகம் அல்ல
(B) அவன் கோழை அல்லன்
(C) இவள் குழந்தை அல்லள்
(D) அவர்கள் விருந்தினர் அல்லர்
(E) விடை தெரியவில்லை

16. சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு.

நீர் __________ தேங்கி இருக்கிறது?

(A) இங்கே
(B) எது
(C) எங்கே
(D) என்ன
(E) விடை தெரியவில்லை

17. கோடிட்ட இடத்தை நிரப்பி சரியான விடையை எழுதுக.

விடை நேரடி விடையாக இருப்பதால் அது __________ விடை எனப்படும்.

(A) இனமொழி விடை
(B) குறிப்பு விடை
(C) வெளிப்படை விடை
(D) ஏவல் விடை
(E) விடை தெரியவில்லை

18. ‘ஔ’ என்னும் எழுத்துக்கு இன எழுத்து __________.

(A) உ
(B) ஓ
(C) ஐ
(D) ஏ
(E) விடை தெரியவில்லை

19. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

கடலுக்கு வேறு பெயர் __________.

(A) பரவை
(B) பறவை
(C) பருவை
(D) பறுவை
(E) விடை தெரியவில்லை

20. பின்வரும் சந்தக் கவிதையில் வந்தப் பிழைகளைத் திருத்துக.

“காலமலைத் தூறலிளே

கழையாய்ப் பிறப்பெடுத்தோம்”

(A) மழை, தூறல், களை
(B) மலை, தூறள், கலை
(C) மழை, தூறழ், கழை
(D) மலை, தூரல், கலை
(E) விடை தெரியவில்லை

21. குறில் - நெடில் மாற்றம் பொருள் வேறுபாடு அறிக.

விடு – வீடு

(A) சேருதல் – மலை
(B) பிரிந்துபோதல் – குடியிருப்பு
(C) சேருதல் – அருவி
(D) பிரிந்துபோதல் – மாலை
(E) விடை தெரியவில்லை

22. விழித்து + எழும் - என்னும் சொல்லைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

(A) விழி எழும்

(B) விழிதெழும்

(C) விழித்து எழும்

(D) விழித்தெழும்

(E) விடை தெரியவில்லை

23. நீலம் + வான் சேர்த்தெழுதுக.

(A) நீலம்வான்

(B) நீளம்வான்

(C) நீலவான்

(D) நீலவ்வான்

(E) விடை தெரியவில்லை

24. இவை + எட்டும் சேர்த்தெழுதுக.

(A) இடைஎட்டும்

(B) இவையெட்டும்

(C) இவ்வெட்டும்

(D) இவ்எட்டும்

(E) விடை தெரியவில்லை

25. பிரித்தெழுதல்

'வானமளந்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(A) வானம் + அளந்தது

(B) வானம் + மளந்தது

(C) வான் + அளந்தது

(D) வான் + மளந்தது

(E) விடை தெரியவில்லை

26. பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள்

(A) தாள், செம்மல், போது

(B) அரும்பு, செம்மல், போது

(C) தட்டு, போது, அரும்பு

(D) கழி, அரும்பு, போது

(E) விடை தெரியவில்லை

27. அவன் நன்கு படித்தான் ________ தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்றான்.

(A) ஆகவே

(B) ஏனெனில்

(C) அதனால்

(D) அதுபோல

(E) விடை தெரியவில்லை

28. பேச்சு வழக்குச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்.

உத்தியோகம்

(A) வேலை

(B) அதிகாரி

(C) வல்லுநர்

(D) பணி

(E) விடை தெரியவில்லை

29. ஊர்ப்பெயரின் மரூஉவை எழுதுக.

உதகமண்டலம்

(A) ஊட்டி

(B) உதகு

(C) உதகை

(D) உதகம்

(E) விடை தெரியவில்லை

30. புகழாலும் பழியாலும் அறியப்படுவது

(A) அடக்கமுடைமை

(B) நாணுடைமை

(C) நடுவுநிலைமை

(D) பொருளுடைமை

(E) விடை தெரியவில்லை

31. புள் என்பதன் வேறு பெயர்

(A) மனிதன்

(B) பூச்சிக்கொல்லி

(C) விலங்கு

(D) பறவை

(E) விடை தெரியவில்லை

32. எழுத்து வழக்கு.

ஒத்தடம் – எழுத்து வழக்குச் சொல்லைத் தேர்க.

(A) ஒள்ளடம்

(B) ஒல்லடம்

(C) ஒற்றடம்

(D) ஒற்று

(E) விடை தெரியவில்லை

33. இருபொருள் தரும் சரியான விடையைத் தெரிவு செய்க.

திங்கள்

(A) வருடம், சூரியன்

(B) நாள், விண்மீன்

(C) கிழமை, செவ்வாய்

(D) மாதம், சந்திரன்

(E) விடை தெரியவில்லை

34. ஒரு பொருள் பன்மொழி
சூரியன்

(A) குழவி, பிள்ளை
(B) புவி, தரணி
(C) பரிதி, வெய்யோன்
(D) கூறு, விளம்பு
(E) விடை தெரியவில்லை

35. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.
காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை

(A) வருகை, சப்பாணி, காப்பு, தால், முத்தம், செங்கீரை
(B) சப்பாணி, வருகை, காப்பு, தால், முத்தம், செங்கீரை
(C) காப்பு, சப்பாணி, செங்கீரை, தால், முத்தம், வருகை
(D) காப்பு, தால், சப்பாணி, செங்கீரை, முத்தம், வருகை
(E) விடை தெரியவில்லை

36. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) சென்றாள்
(B) வந்த
(C) சித்திரை
(D) நடந்து
(E) விடை தெரியவில்லை

37. ஆனைக்கொம்பன், குண்டு, குதிரை வாலி, சிறுமணி ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கும்?

(A) சம்பா நெல் வகை
(B) சம்பா கோதுமை வகை
(C) திணை அரிசி வகை
(D) சிறு சாமை வகை
(E) விடை தெரியவில்லை

38. பசுமையான ____________ ஐக் ____________ கண்ணுக்கு நல்லது.

(A) காணுதல் / காட்சி
(B) புதையல் / புதைத்தல்
(C) தொடுத்தல் / தொடுதல்
(D) சுட்டல் / சுடுதல்
(E) விடை தெரியவில்லை

39. ஓரெழுத்து ஒரு மொழியின் பொருளைக் கண்டறிக.

வெள

(A) மேகம்
(B) வான்
(C) அகலம்
(D) கவர்
(E) விடை தெரியவில்லை

40. 'இளமை' என்னும் சொல்லின் எதிர்ச்சொல்

(A) வளமை
(B) முதுமை
(C) தனிமை
(D) எளிமை
(E) விடை தெரியவில்லை

41. என்னே, இதன் பெருமை ! இதில் எவ்வகை உணர்ச்சிக்குரிய வியப்புக்குறி இடம்பெற்றுள்ளது?

(A) அவலம்
(B) வியப்பு
(C) வரவேற்றல்
(D) வாழ்த்து
(E) விடை தெரியவில்லை

42. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு.

(A) முற்றுப்புள்ளி = பொருள்களை எண்ணும் நிலை

(B) முக்காற்புள்ளி = சிறுதலைப்பு

(C) காற்புள்ளி = ஆகவே முதலிய சொற்களின்பின்

(D) அரைப்புள்ளி = ஒரே எழுவாயில் பல தொடர்கள் தொடர்ந்து வரும் இடங்கள்

(E) விடை தெரியவில்லை

43. வாக்கிய அமைப்பினைக் கண்டறிக.
திருக்குறள் கயல்விழியால் படிக்கப்பட்டது.

(A) செய்யப்பாட்டு வினை
(B) செய்வினை
(C) தன்வினை
(D) பிறவினை
(E) விடை தெரியவில்லை

44. சரியான தொகைமரபைத் தேர்ந்தெடு.

(A) மக்கள்கொத்து
(B) ஆட்டுநிரை
(C) ஆமந்தை
(D) கற்குவியல்
(E) விடை தெரியவில்லை

45. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு.

(A) பூ = கொய்
(B) இலை = பறி
(C) கூடை = முடை
(D) பானை = செய்
(E) விடை தெரியவில்லை

46. மரபுப் பிழையற்ற தொடரைத் தேர்வு செய்க.

(A) புறா கத்தும்
(B) புறா குழறும்
(C) புறா குனுகும்
(D) புறா கூவும்
(E) விடை தெரியவில்லை

47. ‘கத்திரி’யின் இளநிலை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) கன்று
(B) நாற்று
(C) குருத்து
(D) பிள்ளை
(E) விடை தெரியவில்லை

48. சரியான தொடரைத் தேர்ந்தெடு.

(A) நேற்று மழை பெய்யும்
(B) நேற்று மழைபெய்தது
(C) நேற்று வருவேன்
(D) நேற்று மழை பெய்கிறது
(E) விடை தெரியவில்லை

49. ஒன்றன்பாலைக் குறிக்கும் சொல்லைக் கண்டறிக.

(A) வந்தன
(B) வந்தார்கள்
(C) வந்தது
(D) வந்தாள்
(E) விடை தெரியவில்லை

50. அஃறிணை அல்லாத சொல்லைக் கண்டறிக.

(A) காடு
(B) காற்று
(C) தளபதி
(D) ஆந்தைகள்
(E) விடை தெரியவில்லை

51. ஒருமை - பன்மை பிழை

உயர்ந்தோர் ———— புகழ்ந்து கொள்ள மாட்டார்கள்.

(A) தம்மைத் தாமே
(B) தன்னைத் தாமே
(C) நின்னைத் தானே
(D) எம்மைத் தானே
(E) விடை தெரியவில்லை

52. வாக்கிய அமைப்பினைக் கண்டறிக.

கயல்விழி திருக்குறளைப் படித்தாள்.

(A) எதிர் வினைத் தொடர்
(B) பிறவினைத் தொடர்
(C) செய்வினைத் தொடர்
(D) செயப்பாட்டு வினைத் தொடர்
(E) விடை தெரியவில்லை

53. எவ்வகை வாக்கியம்

புத்தகம் காணாமல் போயிற்று.

(A) செய்வினை வாக்கியம்
(B) பிற வினை வாக்கியம்
(C) வினை முற்று
(D) செயப்பாட்டு வினை வாக்கியம்
(E) விடை தெரியவில்லை

54. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்.

சரியான சொற்றொடரைத் தெரிவு செய்க.

(A) வாய்மை சொற்களைச் சொல்லுதல் மற்றவர்க்குத் தராத தீங்கு எனப்படுவது

(B) தீங்கு சொற்களைச் சொல்லுதல் எனப்படுவது மற்றவர்க்கு வாய்மை

(C) வாய்மை எனப்படுவது மற்றவர்க்குத் தீங்கு தராத சொற்களைச் சொல்லுதல்

(D) சொற்களைச் சொல்லுதல் எனப்படுவது மற்றவர்க்குத் தீங்கு தராத வாய்மை

(E) விடை தெரியவில்லை

55. கீழ்க்காணும் தொடர்களில் ஒரு பொருளைத் தரும் இணை நேரிணை சுட்டும் சரியான தொடர்

(A) குழந்தையை தாய் வளர்த்தாள் சீராட்டி பாராட்டி

(B) தாய் பாராட்டி சீராட்டி குழந்தையை வளர்த்தாள்

(C) தாய் குழந்தையைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தாள்

(D) பாராட்டி சீராட்டி வளர்த்தாள் தாய் குழந்தையை

(E) விடை தெரியவில்லை

56. கலைச் சொல் அறிக

Weather

(A) வானிலை

(B) காலநிலை

(C) பருவநிலை

(D) மழைப்பொழிவு

(E) விடை தெரியவில்லை

57. Internet என்பதன் தமிழ்ச்சொல்.

(A) இணையம்
(B) புலனம்
(C) மென்பொருள்
(D) இசுகை
(E) விடை தெரியவில்லை

58. Art Critic என்பதன் கலைச் சொல்லைத் தேர்க.

(A) கலை விமர்சகர்
(B) கலை வித்தகர்
(C) கலை ஆர்வலர்
(D) கலை நிபுணர்
(E) விடை தெரியவில்லை

59. கலைச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தெரிவு செய்க.

Space Technology

(A) மீநுண் தொழில்நுட்பம்
(B) உயிரித் தொழில்நுட்பம்
(C) விண்வெளித் தொழில்நுட்பம்
(D) மண்வெளித் தொழில்நுட்பம்
(E) விடை தெரியவில்லை

60. கலைச் சொல் அறிக.

Space

(A) திறந்தவெளி
(B) சமவெளி
(C) பொதுவெளி
(D) வான்வெளி
(E) விடை தெரியவில்லை

61. கலைச்சொல் அறிந்து எழுதுக.

Round Table Conference

(A) நம்பிக்கை

(B) இரட்டை வாக்குரிமை

(C) அரசியலமைப்பு

(D) வட்ட மேசை மாநாடு

(E) விடை தெரியவில்லை

62. பின்வருவனவற்றுள் எது Allocation என்ற ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழ்க் கலைச்சொல் அல்ல.

(A) பங்கீடு

(B) ஒதுக்கீடு

(C) ஒதுக்கப்பற்று

(D) மதிப்பீடு

(E) விடை தெரியவில்லை

63. கலைச் சொல் தேர்க

Transplantation

(A) மெய்யுணர்வு

(B) கருணை

(C) உறுப்புமாற்று அறுவை சிகிச்சை

(D) மனநல சிகிச்சை

(E) விடை தெரியவில்லை

64. கலைச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்வு செய்க.

Prosody

(A) சொல்லிலக்கணம்

(B) எழுத்திலக்கணம்

(C) யாப்பிலக்கணம்

(D) அணியிலக்கணம்

(E) விடை தெரியவில்லை

65. கலைச்சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லைத் தெரிவு செய்க.

Agronomy

(A) சூழலியல்

(B) வனவியல்

(C) உளவியல்

(D) உழவியல்

(E) விடை தெரியவில்லை

66. திருக்குறளில் கூறியுள்ள அறநெறிக் கருத்துகளை அனைவருக்கும் எடுத்துரைத்து விழிப்புணர்வூட்டும் வகையில் செயலாற்றிவரும் நெறியாளர் ஒருவருக்கு 1986 ஆம் ஆண்டு முதல் அய்யன் திருவள்ளுவர் விருது யாரால் வழங்கப்படுகிறது?

(A) இந்திய ஒன்றிய அரசு

(B) தமிழ்நாடு அரசு

(C) சாகித்திய அகாதெமி

(D) நோபல் பரிசு அமைப்பு

(E) விடை தெரியவில்லை

67. பழமொழியின் பொருளைத் தேர்வு செய்க.

உப்பில்லாப் ————

(A) பண்டம் குப்பையிலே

(B) பாண்டம் தெருவிலே

(C) குப்பையிலே பண்டம்

(D) கடையிலே பண்டம்

(E) விடை தெரியவில்லை

68. பழமொழியின் பொருளைத் தேர்வு செய்க.

ஒரு பானை ————

(A) சோற்றுக்கு ஒரு சோறு பதம்

(B) சோற்றுக்கு இரு சோறு பதம்

(C) சோற்றுக்கு மூன்று சோறு பதம்

(D) ஒரு சோறுக்கு இரண்டு சோறு பதம்

(E) விடை தெரியவில்லை

69. பழமொழியின் பொருளைத் தேர்வு செய்க.

உப்பிட்ட வரை ————

(A) உள்ளளவும் தினை

(B) உள்ளளவும் பனை

(C) உள்ளளவும் நினை

(D) உள்ளளவும் வினை

(E) விடை தெரியவில்லை

70. மரபுத் தொடர்களைப் பொருளோடு பொருத்துக

கானல் நீர்

(A) எண்ணிச் செயல்படாமை

(B) விரைந்து வெளியேறுதல்

(C) இருப்பது போல் தோன்றும், ஆனால் இருக்காது

(D) இயலாத செயல்

(E) விடை தெரியவில்லை

71. மரபுத் தொடருக்கு உரியப்பொருளைத் தேர்வு செய்க.

அவசரக் குடுக்கை ————.

(A) ஆராய்ந்து பாராமை

(B) எண்ணிச் செயல்படாமை

(C) புகழ்பெற்று விளங்குதல்

(D) விரைந்து வெளியேறுதல்

(E) விடை தெரியவில்லை

72. சரியான மரபுத் தொடரால் நிரப்புக.

திண்டுக்கல், பூக்கள் உற்பத்தியில் ____________ நகரமாக விளங்குகிறது.

(A) எட்டாக்கனி

(B) கல்லில் நார் உரித்தல்

(C) கொடி கட்டிப் பறக்கும்

(D) வாழையடி வாழையாக

(E) விடை தெரியவில்லை

73. பின்வரும் உவமைத் தொடரின் பொருளறிக.

கண்ணினைக் காக்கும் இமை போல

(A) கோவமாக

(B) அக்கறையாக

(C) வேகமாக

(D) பணிவாக

(E) விடை தெரியவில்லை

74. பின்வரும் உவமைத் தொடரின் பொருளறிக.

கிணற்றுத் தவளை போல

(A) பார்க்காமல் இருப்பது

(B) சிரித்துக்கொண்டே இருப்பது

(C) மறைப்பது

(D) வெளி உலகம் தெரியாமல் இருப்பது

(E) விடை தெரியவில்லை

75. பின்வரும் உவமைத் தொடரின் பொருளறிக.

எலியும் பூனையும் போல

(A) நண்பனாக

(B) வீரனாக

(C) எதிரியாக

(D) கலைஞனாக

(E) விடை தெரியவில்லை

உதகை, கொடைக்கானல் போன்ற மலைப்பகுதிகளில் குளிரைத் தாக்குப்பிடிக்க முடியாத அரியவகை தாவரங்களைக் கண்ணாடி அறைகளில் வைத்துப் பராமரிப்பார்கள். கண்ணாடி அகச்சிவப்புக் கதிர்களைக் கடத்தாது. அந்த வெப்பம் உள்ளேயே தங்கி அறையைச் சூடாக்கிவிடுகிறது. பசுங்குடில் விளைவு என்பது இதுவே. புவிப்பரப்பில் விழும் சூரிய வெளிச்சம் இதே வேலையைத்தான் செய்கிறது. வளிமண்டலத்திலுள்ள கரிமவளி, கண்ணாடி போல அகச்சிவப்புக் கதிரைச் சிறைபடுத்தி, பூமியைச் சூடாக்குகிறது. உலகம் உயிர்த்திருக்க இந்த வெப்பம் தேவை. பூமிக்கோளம், வெள்ளிக்கோளுக்கும் செவ்வாய்க்கும் இடையில் தனது அச்சில் சுழன்றபடி சூரியனை வலம் வருவது. வெள்ளிக்கோள் சூரியக் குடும்பத்திலேயே மிகவும் வெப்பமான கோள். செவ்வாயின் நிலைமையோ மைனஸ் 85 பாகை செல்சியஸ் உறைநிலை. 4 பாகை வெப்பத்தை மட்டும் உயர்த்த முடிந்து விட்டால் அங்கே உறைநிலையிலுள்ள கரிவளக்கூறுகள் வளிநிலைக்குத் திரும்பி, படிப்படியாக செவ்வாய்கோள் மித வெப்பநிலைக்கு வந்துவிட முடியும். அதன் பிறகு, அங்கு உயிரினங்கள் குடியேற்றம் சாத்தியப்படலாம்.

76. கண்ணாடி ———————— கடத்தாது.

(A) அகச்சிவப்புக் கதிர்கள்
(B) புற ஊதாக் கதிர்கள்
(C) சூரியக் கதிர்கள்
(D) கரிமவளி
(E) விடை தெரியவில்லை

77. சூரியக் குடும்பத்திலேயே மிகவும் வெப்பமான கோள் ————————

(A) செவ்வாய்க் கோள்
(B) பூமிக் கோள்
(C) வெள்ளிக் கோள்
(D) புதன் கோள்
(E) விடை தெரியவில்லை

78. வளிமண்டலத்திலுள்ள கரிம வளி, அகச்சிவப்புக் கதிரைச் சிறைபடுத்தி ———— சூடாக்குகிறது

(A) செவ்வாய்
(B) பூமி
(C) வெள்ளி
(D) சூரியன்
(E) விடை தெரியவில்லை

79. மலைப்பகுதிகளில் ———— தாக்குப்பிடிக்க முடியாத அரிய வகை தாவரங்களை கண்ணாடி அறைகளில் வைத்திருப்பர்.

(A) வெயில்
(B) மழை
(C) குளிர்
(D) காற்று
(E) விடை தெரியவில்லை

80. வளிமண்டலத்திலுள்ள கரிம வளி ———— போல செயல்படுகிறது.

(A) அறை
(B) அகச் சிவப்புக் கதிர்
(C) ஜன்னல்
(D) கண்ணாடி
(E) விடை தெரியவில்லை

81. From the candidates என்ற தொடரின் தமிழாக்கம் தருக.

(A) தகவல் தருபவரிடமிருந்து
(B) காவல் துறையாளரிடமிருந்து
(C) வேட்பாளரிடமிருந்து
(D) குறையாளரிடமிருந்து
(E) விடை தெரியவில்லை

82. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிந்து எழுதுக.

'PATENT'

(A) சொத்துரிமை
(B) ஆவணம்
(C) காப்புரிமை
(D) பாசனம்
(E) விடை தெரியவில்லை

83. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லறிதல்.

MIGRATION

(A) புரிசை
(B) புகலிடம்
(C) வலசை
(D) வானிலை
(E) விடை தெரியவில்லை

84. REVIVALISM – ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் எது?

(A) மெய்யியலாளர்
(B) மீட்டுருவாக்கம்
(C) செயல்திறன்
(D) நம்பிக்கை
(E) விடை தெரியவில்லை

85. RENAISSANCE – நேரான தமிழ்ச் சொல் எது?

(A) ஆய்வேடு
(B) நம்பிக்கை
(C) புரட்சி
(D) மறுமலர்ச்சி
(E) விடை தெரியவில்லை

86. ‘அறிக அறிவியல்’ என்னும் அறிவியல் இதழை நடத்திய ஆன்மீகத் துறவி யார்?

(A) குன்றக்குடி அடிகளார்
(B) வள்ளலார்
(C) அமுதன் அடிகள்
(D) ஊரன் அடிகள்
(E) விடை தெரியவில்லை

87. ‘குற்றாலமுனிவர்’ எனப் புகழப்படுகின்ற கவிஞரைக் கண்டறிக.

(A) சி. இலக்குவனார்
(B) கண்ணதாசன்
(C) முடியரசன்
(D) டி.கே. சிதம்பரநாதர்
(E) விடை தெரியவில்லை

88. ‘இருண்ட வீடு’ என்ற நூலை இயற்றியவர் யார்?

(A) பாரதிதாசன்
(B) கண்ணதாசன்
(C) தாரா பாரதி
(D) முடியரசன்
(E) விடை தெரியவில்லை

89. தாயகத்துக்குச் சென்ற போப், 1885 முதல் 1908 ஆம் ஆண்டு வரை இருபத்து மூன்றாண்டுகளாக இங்கிலாந்துப் பல்கலைக்கழகத்தில் எவ்விரு மொழிகளைக் கற்பிக்கும் பேராசிரியராகப் பணியாற்றினார்?

(A) தமிழ், சமஸ்கிருதம்
(B) தமிழ், தெலுங்கு
(C) தமிழ், கன்னடம்
(D) தமிழ், மலையாளம்
(E) விடை தெரியவில்லை

90. ‘கண்’ என்ற அடிச்சொல் தோடா மொழியில் எவ்வாறு அமைந்துள்ளது?

(A) கெண்
(B) கண்
(C) கொண்
(D) கண்ணு
(E) விடை தெரியவில்லை

91. ‘தென்மொழி, தமிழ்ச்சிட்டு’ இதழ்களின் வாயிலாகத் தமிழுணர்வை உலகெங்கும் பரப்பியவர் யார்?

(A) பாரதியார்
(B) பாவேந்தர்
(C) திரு.வி.க
(D) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
(E) விடை தெரியவில்லை

92. ‘மொழி ஞாயிறு’ என்று அழைக்கப்படுபவர் யார்?

(A) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
(B) வீரமாமுனிவர்
(C) கம்பர்
(D) தேவநேயப்பாவாணர்
(E) விடை தெரியவில்லை

93. இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுகளில் காணப்படும் மொழி எது?

(A) தமிழ்
(B) இந்தி
(C) தெலுங்கு
(D) துளு
(E) விடை தெரியவில்லை

94. கடல்கோளால் கொள்ளப்பட்ட பழந்தமிழ்க் குமரிக்கண்டம்

(A) இலெமூரியாக் கண்டம்
(B) ஆசியாக் கண்டம்
(C) இலங்கை
(D) சுமத்ரா, ஜாவா
(E) விடை தெரியவில்லை

95. சரியான விடையைத் தேர்க.

'வேளாண் வேதம்' என்று அழைக்கப்படும் நூலினைச் சுட்டுக.

(A) சிறுபஞ்சமூலம்
(B) ஆசாரக்கோவை
(C) முதுமொழிக்காஞ்சி
(D) நாலடியார்
(E) விடை தெரியவில்லை

96. பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

மேற்கண்ட குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி யாது?

(A) உவமையணி
(B) எடுத்துக்காட்டு உவமையணி
(C) உயர்வு நவிற்சியணி
(D) இல்பொருள் உவமையணி
(E) விடை தெரியவில்லை

97. சரியாக சீர் அமையப்பெற்ற குறள் அடியைக் கண்டறிக.

(A) செல சொல்லு வார் கற்ற
(B) சொல்லுச்செல வார் கற்ற
(C) வார் கற்ற செலச்சொல்லு
(D) கற்ற செலச்சொல்லு வார்
(E) விடை தெரியவில்லை

98. வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

இக்குறட்பாவில் குறிப்பிடப்படும் விலங்கு யாது?

(A) நீர் நாய்
(B) நீர் யானை
(C) கவரிமான்
(D) யானை
(E) விடை தெரியவில்லை

99. சரியான குறட்பாவினைத் தேர்வு செய்க.

(A) வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து

(B) வறியார்க்குஒன்று ஈகை ஈவதேமற்று எல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து

(C) வறியார்க்குஒன்று ஈகை ஈவதே எல்லாம் மற்று
குறியெதிர்ப்பை நீரது உடைத்து

(D) வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்
குறியெதிர்ப்பை உடைத்து நீரது

(E) விடை தெரியவில்லை

100. குறட்பாவில் விடுபட்ட சீரினை இட்டு நிரப்புக

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
———— ஓம்பப் படும்.

(A) வாழ்வினும்
(B) இயல்பிலும்
(C) உயிரினும்
(D) நன்மையினும்
(E) விடை தெரியவில்லை

# பகுதி-ஆ (பொது அறிவு)

## Part-B (General Studies)

| | | | | |
|---|---|---|---|---|
| **வினாக்கள்** | **: 101–200** | **மொத்த மதிப்பெண்கள்** | **:** | **150** |
| **Questions** | **: 101–200** | **Total Marks** | **:** | **150** |

101. Which is/are incorrectly paired
பின்வருவனவற்றுள் எது தவறான பொருத்தம்

(1) Synthetic Fertilizers – Urea, Ammonium Sulphate, Potash
செயற்கை உரங்கள் யூரியா, அம்மோனியம் சல்பேட், பொட்டாஷ்

(2) Insecticides – Sevin, Malathion, Thiodande
பூச்சிக் கொல்லிகள் செவின், மாலதியான், தையோடான்டே

(3) Fungicides – Tok-E-25, Basalin, Dalapon
பூஞ்சைக் கொல்லிகள் டோக்-ஈ-25, பேசலின், டாலபோன்

(4) Herbicides – Blitox, Captan, Tilt
களைக் கொல்லிகள் பிளிட்டாக்ஸ், காப்டன், டில்ட்

(A) (1) only
(1) மட்டும்

(B) (1) and (2) only
(1) மற்றும் (2) மட்டும்

(C) (2) and (3) only
(2) மற்றும் (3) மட்டும்

(D) (3) and (4) only
(3) மற்றும் (4) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

102. Assertion [A] : The venom which affects the nervous system is called as 'Neuro toxin'.

கூற்று [A] : நரம்பு மண்டலத்தை பாதிக்கும் நச்சு, நியூரோடாக்ஸின் என்று அழைக்கப்படுகிறது.

Reason [R] : It affects the nerve causing blindness, the phrenic nerve causing respiratory paralysis and nerves of the Jaws causing the lacking of jaws.

காரணம் [R] : இது குருட்டுத்தன்மையை ஏற்படுத்தும் பார்வை நரம்பு சுவாச செயலிழைப்பை ஏற்படுத்தும் ஃபிரனிக் நரம்பு மற்றும் தடை நரம்புகளை பாதிக்கிறது.

(A) Both [A] and [R] are true but [R] is not correct explanation of [A]
கூற்று மற்றும் காரணம் சரியானது ஆனால் காரணம் ஆனது கூற்றுவிற்கு சரியான விளக்கம் இல்லை

(B) Both [A] and [R] are true and [R] is the correct explanations of [A]
கூற்று மற்றும் காரணம் சரியானது ஆனால் காரணம் ஆனது கூற்று விற்கு சரியான விளக்கமாகும்

(C) [A] is true, but [R] is false
கூற்று சரியானது ஆனால் தவறானது

(D) [A] is false, but [R] is true
கூற்று தவறானது ஆனால் காரணம் சரியானது

(E) Answer not known
விடை தெரியவில்லை

103. The properties of genetic code is given below. Find out the correct statement/statements
மரபணுக் குறியீட்டின் பண்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. சரியான சொற்றொடர்/சொற்றொடர்களை கண்டறிக.

(i) Genetic code is triplet
மூன்றின் தொகுதிகளாக காணப்படும்

(ii) It is degenerate
இவைகள் பலவற்றைக் குறியிடாது

(iii) It is commaless
காற் புள்ளிகள் இல்லாமல் தொடர்ச்சியானவை

(iv) Code is universal
பொதுவானவை

(v) Code is non-ambiguous
தெளிவானவை

(A) (i) and (ii) are correct
(i) மற்றும் (ii) சரி

(B) (i), (ii) and (iii) are correct
(i), (ii) மற்றும் (iii) சரி

(C) (i), (ii), (iii) and (iv) are correct
(i), (ii), (iii) மற்றும் (iv) சரி

(D) (i), (ii), (iii), (iv) and (v) are correct
(i), (ii), (iii), (iv) மற்றும் (v) சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

104. Which is not a lewis acid among the following?
கீழ்கண்டவற்றில் எது லூயி அமிலம் கிடையாது?

(A) $PH_3$
(B) $BF_3$
(C) $AlCl_3$
(D) $FeCl_3$
(E) Answer not known
விடை தெரியவில்லை

105. The unit of impulse is
கணத்தாக்கத்தின் அலகு என்பது

(A) N/s
(B) $N/s^2$
(C) Ns
(D) $Ns^2$
(E) Answer not known
விடை தெரியவில்லை

106. Bioethanol can be prepared from :
பயோஎத்தனால் எதிலிருந்து உருவாக்க முடியும்.

(1) Potatoes
உருளைக்கிழங்கு

(2) Corn
சோளம்

(3) Jatropha seed cake
காட்டாமணக்கு விதை கட்டி

(4) Algae
பாசிகள்

Select the correct option from codes given below:
கீழ்கண்டவற்றுள் சரியானவற்றைத் தேர்ந்தெடு.

(A) (1), (2) and (3) only
(1), (2) மற்றும் (3) மட்டும்

(B) (2) and (3) only
(2) மற்றும் (3) மட்டும்

(C) (2), (3) and (4) only
(2), (3) மற்றும் (4) மட்டும்

(D) (1), (2), (3) and (4)
(1), (2), (3) மற்றும் (4)

(E) Answer not known
விடை தெரியவில்லை

107. Which of the following gases are responsible for Acid rain?
கீழ்கண்டவற்றில் எந்த வாயுக்கள் அமில மழைக்குக் காரணமாகின்றன?

(A) Oxygen and Helium
ஆக்சிஜன் மற்றும் ஹீலியம்

(B) Helium and Nitrogen
ஹீலியம் மற்றும் நைட்ரஜன்

(C) Hydrogen and Sulphur
ஹைட்ரஜன் மற்றும் சல்பர்

(D) Nitrogen and Sulphur
நைட்ரஜன் மற்றும் சல்பர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

108. Match the following Rivers with the place of origin :
பின்வரும் நதிகளை அது உருவாகும் இடத்துடன் பொருத்து.

| | | | |
|---|---|---|---|
| (a) | Ravi<br>ரவி | 1. | Madhya Pradesh<br>மத்திய பிரதேசம் |
| (b) | Ganga<br>கங்கா | 2. | Himachal Pradesh<br>ஹிமாச்சல் பிரதேசம் |
| (c) | Chambal<br>சம்பல் | 3. | Chhattisgarh<br>சட்டிஸ்கர் |
| (d) | Mahanadi<br>மகாநதி | 4. | Uttrakhand<br>உத்தரகாண்ட் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 2 | 1 | 3 | 4 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

109. Which of the following national parks are correctly paired with their location?
பின்வருவனவற்றுள் எந்தத் தேசிய பூங்காக்கள் அவற்றின் அமைவிடத்துடன் சரியாக இணைக்கப்பட்டுள்ளன?

| | | |
|---|---|---|
| (1) | Gir National Park<br>கிர் தேசிய பூங்கா | – Andaman and Nicobar islands<br>அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் |
| (2) | Kaziranga National Park<br>காசிரங்கா தேசிய பூங்கா | – Assam<br>அசாம் |
| (3) | Periyar National Park<br>பெரியார் தேசிய பூங்கா | – Kerala<br>கேரளா |
| (4) | Mahatma Gandhi Marine National Park<br>மகாத்மா காந்தி கடல் தேசிய பூங்கா | – Gujarat<br>குஜராத் |

(A) (1) only
(1) மட்டும்

(B) (2) and (3) only
(2) மற்றும் (3) மட்டும்

(C) (1) and (4) only
(1) மற்றும் (4) மட்டும்

(D) (3) only
(3)மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

110. Which are the objectives of National Livestock Mission?
பின்வருவனவற்றுள் எவை தேசிய கால்நடைப் பணியின் நோக்கங்கள்

(i) Sustainable development of livestock sector
கால்நடைத் துறையின் நிலையான வளர்ச்சி

(ii) Sub-mission on Pig development in North-Eastern region
வடகிழக்கு பிராந்தியத்தில் பன்றி வளர்ச்சியை மேம்படுத்துதல்

(iii) Sub-mission on fodder and feed development
தீவனம் மற்றும் தீவனத்தை மேம்படுத்துதல்

(A) (i) only
(i) மட்டும்

(B) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(C) (i), (ii) and (iii)
(i), (ii) மற்றும் (iii)

(D) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

111. Match the Arjuna Awardes of 2024 (Announced in January 2025) given in List-I with their related games given in List-II and select the correct answer from the code given below :

பட்டியல் I ல் கொடுக்கப்பட்டுள்ள 2024 ம் ஆண்டுக்கான அர்ஜுனா விருது பெற்றவர்களை (ஜனவரி 2025ல் அறிவிக்கப்பட்ட) பட்டியல் IIல் கொடுக்கப்பட்டுள்ள தொடர்புடைய விளையாட்டுகளுடன் ஒப்பிட்டு, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டிலிருந்து சரியானப் பதிலைத் தேர்ந்தெடுக்கவும்

| | List - I<br>பட்டியல் - I | | List - II<br>பட்டியல் - II |
|---|---|---|---|
| (a) | Annu Rani<br>அன்னு ராணி | 1. | Athletics<br>தடகளம் |
| (b) | Manisha Ramadass<br>மனிஷா ராமதாஸ் | 2. | Para-Badminton<br>பாரா-பேட்மிட்டன் |
| (c) | Rubina Francis<br>ரூபினா பிரான்சிஸ் | 3. | Para-Athletics<br>பாரா–தடகளம் |
| (d) | Preeti Pal<br>ப்ரீத்தி பால் | 4. | Para-Schooting<br>பாரா-துப்பாக்கிச் சுடுதல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 1 | 2 | 4 | 3 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

112. The Madras Mahajana Sabha was established in
சென்னை மகாஜன சபை எந்த ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது?

(A) 1882 C.E.
(B) 1883 C.E.
(C) 1884 C.E.
(D) 1885 C.E.
(E) Answer not known
விடை தெரியவில்லை

113. Arrange the following Event in chronological order
பின்வரும் நிகழ்வுகளைக் கால வரிசைப்படி எடுத்து எழுதுக.

(1) Rowlatt Act
ரௌலட் சட்டம்

(2) The Indian Press Act
இந்திய பத்திரிக்கைச் சட்டம்

(3) The defence of India Act
இந்திய பாதுகாப்புச் சட்டம்

(4) Khilatat Committee held at Bombay
கிலாபத் குழு பம்பாயில் நடைபெற்றது

(A) (3), (1), (4), (2)
(B) (4), (3), (2), (1)
(C) (1), (2), (4), (3)
(D) (2), (3), (1), (4)
(E) Answer not known
விடை தெரியவில்லை

114. Assertion [A] : A more fundamental change in the structure of Indian Society and the rural economy of the country was wrought by the permanent settlement introduced by cornwallis

கூற்று [A] : காரன்வாலீசால் அறிமுகப்படுத்தப்பட்ட நிரந்தர நிலவரி திட்டம் இந்திய சமுதாயத்தில் ஊரகப் பொருளாதாரத்தின் அடிப்படையான பல மாற்றங்களைக் கொண்டு வந்தது.

Reason [R] : The settlement destroyed the old village community, changed the property relations – create new social classes

காரணம் [R] : இத்திட்டம் பழைய கிராமிய சமுதாயம், சொத்துரிமையில் மாற்றம், புதிய சமுதாய வகுப்பினையும் அழித்தது.

(A) [A] is true, but [R] is false
[A] சரி; ஆனால் [R] தவறு

(B) [A] is false but [R] is false
[A] தவறு ஆனால் [R] சரி

(C) Both [A] and [R] are true; but [R] is not the correct explanation of [A] is correct
[A] மற்றும் [R]; ஆனால் [R] [A]-விற்கான சரியான விளக்கம் அல்ல

(D) Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A]
[A] மற்றும் [R] சரி; மற்றும் [R] [A]-விற்கான சரியான விளக்கம் ஆகும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

115. The Theosophical Society was originally founded in New Yark by Madame H.P. Blavatsky and H.S. Oleott, It was transferred the Head Quarters to

மேடம் H.P. ப்ளவட்ஸ்கி மற்றும் H.S.ஹோகட் அவர்களால் நியூயார்க்கில் தோற்றுவிக்கப்பட்ட பிரம்மஞான சபையின் தலைமையகம் எங்கு மாற்றப்பட்டுள்ளது.

(A) Washington – America
வாஷிங்டன் – அமெரிக்கா

(B) Pune – Bombay
பூனா – பாம்பே

(C) Adaiyar – Madras
அடையாறு – மதராஸ்

(D) Calcutta – Bengal
கல்கத்தா – வங்காளம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

116. Match the correctly the deities with their corresponding :
பிரதான தெய்வங்களை அவற்றின் தொடர்புடைய நிலங்களுடன் சரியாகப் பொருத்தவும்.

| | | | |
|---|---|---|---|
| (a) | Mayon<br>மாயோன் | 1. | Neydal<br>நெய்தல் |
| (b) | Seyon<br>சேயோன் | 2. | Kurunji<br>குறுஞ்சி |
| (c) | Vendan<br>வேந்தன் | 3. | Mullai<br>முல்லை |
| (d) | Varunan<br>வருணன் | 4. | Marudham<br>மருதம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

(E) Answer not known
விடை தெரியவில்லை

117. Which among the following statements are correct regarding Krishna Devaraya?
பின்வருவனவற்றுள் கிருஷ்ணதேவராயரைப் பற்றிய சரியான கூற்று எது?

I. Amuktha Malyatha was written by Krishnadevaraya
அமுக்த மால்யதா கிருஷ்ணதேவராயரால் எழுதப்பட்டது.

II. Krishnadevaraya maintained cordial relationship with Portuguese
கிருஷ்ண தேவராயர் போர்ச்சுக்கீசியரோடு சுமூக உறவை மேற்கொண்டிருந்தார்

III. Appaji Saluvathimma was his son
அப்பாஜி சாளுவதிம்மர் அவரின் புதல்வர் ஆவார்

IV. Krishna devaraya was a Vaishnavite.
கிருஷ்ண தேவராயர் ஒரு வைணவர்

(A) I alone is correct
I மட்டும் சரியானது

(B) I, II and III are correct
I, II மற்றும் III சரியானவை

(C) I, II and IV are correct
I, II மற்றும் IV சரியானவை

(D) All are correct
அனைத்தும் சரியானவை

(E) Answer not known
விடை தெரியவில்லை

118. Name the woman who influenced prince Jahandar Shah
இளவரசர் ஜகந்தர் ஷாவிடம் செல்வாக்குச் செலுத்திய பெண்ணின் பெயரைக் குறிப்பிடுக.

(A) Jahanara Begam
ஜகரைா பேகம்

(B) Lal Kunwar
லால் குன்வர்

(C) Mumtaz Mahal
மும்தாஜ் மஹால்

(D) Zeenat Mahal
ஜீனத் மஹால்

(E) Answer not known
விடை தெரியவில்லை

119. Choose the right answer among type which of the following statements true about Vrahat - Samhita.
விராகட் சம்கிதா பற்றிய உண்மையான கூற்றினைப் பின்வருவற்றிலிருந்து கூறுக.

(i) Describe twenty varieties of precious stones and their colour
20 வகையான கற்கள் மற்றும் அவற்றின் நிறத்தை விவரிக்கிறது

(ii) Economic prosperity which prevailed during the Gupta period
குப்தர் காலத்தில் நிலவிய பொருளாதார வளத்தை குறிப்பிடுகிறது

(iv) It helped the study about agriculture and Animal husbandary
இவை வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பு பற்றி படிப்பதற்கு உதவுகிறது

(A) (iii) correct
(iii) சரி

(B) (i) and (ii) are correct
(i) மற்றும் (ii) ம் சரி

(C) (ii) and (iii) are correct
(ii) மற்றும் (iii) ம் சரி

(D) (i) and (iii) are correct
(i) மற்றும் (iii) ம் சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

120. Reason and Assertion type
காரணம் மற்றும் கூற்று வகை.

Assertion [A] : Indus Civilization was the aforeside seals of Indian origin found in Western Asia

கூற்று [A] : சிந்து நாகரீகம் என்பது மேற்கு ஆசியாவில் காணப்படும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முந்தைய முத்திரைகள் ஆகும்.

Reason [R] : Indu civilization not represented a perfect Bronze Age.

காரணம் [R] : சிந்து நாகரீகம் ஒரு சரியான வெண்கல யுகத்தை குறிக்கவில்லை

(A) [A] is false, but [R] is true
[A] தவறு ஆனால் [R] சரி

(B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]
[A] மற்றும் [R] இரண்டும் உண்மை [R] என்பது [A] ன் சரியான விளக்கம்

(C) [A] is true but [R] is false
[A] சரி ஆனால் [R] தவறு

(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] is correct
[A] மற்றும் [R] இரண்டும் சரி ஆனால் [R] என்பது [A] ன் சரியான விளக்கம் அல்ல

(E) Answer not known
விடை தெரியவில்லை

121. Which of the following statements are true about speaker of the Lok Sabha?
பின்வருவனவற்றுள் மக்களவைத் தலைவர் குறித்து சரியானதை தெரிவு செய்க.

(i) His position is similar to that of the speaker of House of commons of United Kingdom
மக்களவைத் தலைவரின் நிலை இங்கிலாந்தில் உள்ள பொதுமக்கள் சபையின் தலைவருக்கு நிகரானதாகும்

(ii) The Speaker shall preside over the joint sitting of the two houses of parliament
பாராளுமன்றத்தின் கூட்டு கூட்டத்திற்கு இவரே தலைமை தாங்குகிறார்

(iii) First women speaker of the Lok Sabha is Mrs. Ramadevi
இந்தியாவின் முதல் பெண் மக்களவைத் தலைவர் திருமதி. ரமாதேவி ஆவார்.

(A) (i) only
(i) மட்டும்

(B) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

122. The Recent Judgement by the Supreme Court on the congress M.P. Of Rajyasabha Imran Pratapgarhi case is associated with the
காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் இம்ராம் பிரதாப்காரி வழக்கில் உச்ச நீதிமன்றம் அன்மையில் வழங்கிய தீர்ப்பு எது தொடர்பானதாகும்?

(A) Free Speech
பேச்சு உரிமை

(B) Hate Speech
வெறுப்பு பேச்சுரிமை

(C) Religion Rights
மத உரிமை

(D) Environmental Rights
சுற்றுச்சூழல் உரிமை

(E) Answer not known
விடை தெரியவில்லை

123. Assertion [A] : The Supreme Court of India constituted a "Special Bench" titled as the "Social Justice Bench".

கூற்று [A] : இந்திய உச்சநீதிமன்றம் "சமூக நீதி அமர்வு" என்ற சிறப்பு அமர்வை ஏற்படுத்தியுள்ளது.

Reason [R] : It provides a specialised approach for the early disposal of cases relating to social issues

காரணம் [R] : சமூகச் சிக்கல்கள் குறித்த வழக்குகளில் சிறப்பு கவனம் கொண்டு விரைவாக இத்தகைய வழக்குகளை முடித்து வைக்க இந்த அமர்வு உதவுகின்றது.

(A) [A] is true, but [R] is false
கூற்று [A] சரி, காரணம் [R] தவறு

(B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]
கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி, மேலும் காரணம் [R] கூற்று [A] வின் சரியான விளக்கம் ஆகும்

(C) [A] is false [R] is true
கூற்று [A] தவறு, காரணம் [R] சரி

(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]
கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி, ஆனால் காரணம் [R] கூற்று [A] வின் சரியான விளக்கம் அல்ல

(E) Answer not known
விடை தெரியவில்லை

124. The 42nd Constitutional Amendment Act, 1976 empowered the centre to deploy its forces to maintain law and order in any state by inserting.

42-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம், 1976 எந்த மாநிலத்திலும் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க தனது படைகளை நிலைநிறுத்த ஒன்றிய அரசுக்கு அதிகாரம் அளித்தது ?

(A) Article 256 A
விதி 256 A

(B) Article 257 A
விதி 257 A

(C) Article 258 A
விதி 258 A

(D) Article 259 A
விதி 259 A

(E) Answer not known
விடை தெரியவில்லை

125. Consider the following statements with regard to Indian Federation and select the correct option.
இந்திய கூட்டாட்சி தொடர்பான பின்வரும் அறிக்கைகளைக் கொண்டு சரியானவற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(i) There is a bifurcation of the judiciary between the centre and the state
மத்திய அரசுக்கும் மற்றும் மாநில அரசுக்கும் இடையில் நீதித்துறை இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது

(ii) There is no equality of representation of the states in the council of states
மாநிலங்களவையில், மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தில் சமத்துவம் இல்லை

(iii) Even in the normal working, the federal system is given the strength of a Federal features
சாதாரண செயல்பாட்டில் கூட, கூட்டாட்சி அமைப்புக்கு கூட்டாட்சி தனிச்சிறப்புகளின் வலிமை வழங்கப்படுகிறது

(A) (i) alone is correct
(i) மட்டும் சரி

(B) (ii) and (iii) alone are correct
(ii) மற்றும் (iii) சரியானவை

(C) (ii) alone is correct
(ii) மட்டும் சரி

(D) (i) and (ii) alone are correct
(i) மற்றும் (ii) சரியானவை

(E) Answer not known
விடை தெரியவில்லை

126. The 73rd Constitutional Amendment Act came into force from

73 வது அரசியலமைப்பு சட்டம் திருத்தம், நடைமுறைக்கு வந்த ஆண்டு

(A) 1994

(B) 1991

(C) 1992

(D) 1993

(E) Answer not known
விடை தெரியவில்லை

127. Consider the following statements, choose the correct answer :

கீழ்கண்ட கூற்றுகளை கருதுக, சரியான விடையை தேர்ந்தெடுக்க :

(i) The ancient Indian Institution Sabha and Samiti said to be the rudiments of a modern parliament
பண்டைய இந்திய நிறுவனங்களான சபா மற்றும் சமீதி ஆகியவைகள் நவீன பாராளுமன்றத்தின் அடிப்படைகள் ஆகும்

(ii) The Samiti was the selected body
சமீதி எனப்படுவது தெரிவுசெய்யப்பட்ட உறுப்பாகும்

(iii) The Sabha was the elected body
சபா எனப்படுவது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பாகும்

(iv) The Decision by the majority was regarded as "Inviolable"
பெரும்பான்மை அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவானது "மீறப்படாததாகும்"

(A) (i) and (ii) only correct
(i) மற்றும் (ii) மட்டும் சரி

(B) (i) and (iv) only correct
(i) மற்றும் (iv) மட்டும் சரி

(C) (ii) and (iii) only correct
(ii) மற்றும் (iii) மட்டும் சரி

(D) (iv) and (ii) only correct
(iv) மற்றும் (ii) மட்டும் சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

128. The president, to exercise veto power is empowered by
குடியரசுத் தலைவர் தடுப்பாணையை செயற்படுத்த அதிகாரமளிப்பது விதி

(A) Article 110
விதி 110

(B) Article 111
விதி 111

(C) Article 52
விதி 52

(D) Article 78
விதி 78

(E) Answer not known
விடை தெரியவில்லை

129. Which country joined the North Atlantic Treaty Organisation (NATO) in 2024?

எந்த நாடு 2024ல் வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (நேட்டோ) வில் சேர்ந்தது ?

(A) DENMARK
டென்மார்க்

(B) SWEDEN
ஸ்வீடன்

(C) ITALY
இத்தாலி

(D) UKRAINE
உக்ரைன்

(E) Answer not known
விடை தெரியவில்லை

130. The dispute over the election of president of India can be filed in the Supreme Court within
குடியரசுத்தலைவர் தேர்தலில் எழும் சிக்கல் குறித்து உச்சநீதிமன்றத்தில் ________ நாட்களுக்குள் வழக்கு தொடுக்க வேண்டும்.

(A) 10 days
10 நாட்கள்

(B) 20 days
20 நாட்கள்

(C) 30 days
30 நாட்கள்

(D) 40 days
40 நாட்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

131. Choose the incorrect pairs :
தவறான இணையை தேர்வு செய்க.

(1) MISA – Maintenance of Internal Security Act

MISA – உள்நாட்டு பாதுகாப்பு சட்டம்

(2) NASA – National Security Act

NASA – தேசிய பாதுகாப்பு சட்டம்

(3) TADA – Terrorist and Disruptive Activities Prevention Act

TADA – பயங்கரவாத மற்றும் சீர்குலைவுத் தடுப்புச் சட்டம்

(4) POTA – Prediction of Terrorism Act

POTA – தீவிரவாத கணிப்புச் சட்டம்

(A) (1) and (3)
(1) மற்றும் (3)

(B) (1) and (4)
(1) மற்றும் (4)

(C) (2) and (3)
(2) மற்றும் (3)

(D) (2) and (4)
(2) மற்றும் (4)

(E) Answer not known
விடை தெரியவில்லை

132. The 104th constitutional Amendment Act, 2019 came into force on
104வது அரசமைப்புச் சட்டதிருத்தம், 2019 நடைமுறைக்கு வந்த நாள்

(A) 7th December 2019
டிசம்பர் 7, 2019

(B) 12th December 2019
டிசம்பர் 12, 2019

(C) 20th January 2020
சனவரி 20, 2020

(D) 25th January 2020
சனவரி 25, 2020

(E) Answer not known
விடை தெரியவில்லை

133. Consider the Assertion [A] and Reason [R] type question, choose the correct answer :

கருத்து [A] காரணம் [R] வகை விளைவை கருதுக, சரியான விடையை தேர்ந்தெடுக்க :

Assertion [A] : Social Justice is an integral part of the justice in the genetic sense.

கூற்று [A] : சமூகநீதி என்பது, நீதிபெறும் ஓர் ஒருங்கிணைந்த பொதுவானதோர் வகைப்பாட்டு வடிவத்தின் அங்கமாகும்

Reason [R] : Justice is the Genus.

காரணம் [R] : ஏனெனில், நீதி என்பது, பொதுமைப்படுத்தப்பட்ட வகைப்பாட்டியலாகும் (பேரினம் போல)

